Registered as a news paper.
பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு


தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 வைகாசி 25 ஹிஜ்ரி 1427 ஜ அவ்வல் 11 (08.06.2006) வியாழக்கிழமை இதழ் 250

# படையினர் கண்ணிவெடித் தாக்குதல்; மட்டக்களப்பில் 10 பொதுமக்கள் பலி!

## 3 குழந்தைகள் உட்பட 9 பேர் படுகாயம்



மட்டக்களப்பு—

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் - 10 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், மூன்று குழந்தைகள் உட்பட 9 பேர் படுகாயமடைந்தனர்.

மட்டக்களப்பு வடமுனைப் பகுதியில் நெடுங்கல் எனுமிடத்தில் நேற்றுக்காலை 10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வடமுனையிலிருந்து (08ஆம் பக்கம் பார்க்க)



## கருணா குழுவின் வன்முறைகள் யுத்த நிறுத்த மீறல்கள் அல்ல!

### என்கிறது கண்காணிப்புக் குழு

கொழும்பு—

துணை இராணுவக்குழுவான கருணா குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறைகள் - போர்நிறுத்தமீறல் இல்லை என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக கண்காணிப்புக்குழு பேச்சாளர் ஹெலன் ஒலப்ஸ் டோட்ரயர் தெரிவித்துள்ளதாவது:-

துணை இராணுவக்குழு மீது ஐரோப்பிய ஒன்றியம் விதிக்கவுள்ள தடை விவகாரத்தில் நாம் தலையிட மாட்டோம். அது கண்காணிப்புக்குழுவின் செயற்

## விடுதலைப் புலிகளை ஜப்பான் தடைசெய்யாது

### யசூசி அகாஷி தெரிவிப்பு

ரோக்கியோ—

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகளை தடைசெய்த போதிலும், ஜப்பான் அந்த வழியைப் பின்பற்றும் திட்டம் எதனையும் கொண்டிருக்கவில்லை என ஜப்பானின் இலங்

வர் யசூசி அகாசி தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் அதிகரித்துவரும் வன்செயல்கள் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்துகின்றன. ஐரோப்பிய ஒன்றி




செய்தபோதிலும் ஜப்பானும் அவ்வாறு செய்ய வேண்டிய தேவை

## எனகிறது கண்காணிப்புக் குழு

கொழும்பு —

துணை இராணுவக்குழுவான கருணா குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறைகள் - போர்நிறுத்தமீறல் இல்லை என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக கண்காணிப்புக்குழு பேச்சாளர் ஹெலன் ஓலப்ஸ் டோட்ரயர் தெரிவித்துள்ளதாவது:-

துணை இராணுவக்குழு மீது ஐரோப்பிய ஒன்றியம் விதிக்கவுள்ள தடை விவகாரத்தில் நாம் தலையிடமாட்டோம். அது கண்காணிப்புக்குழுவின் செயற்பாடுகளுக்கு அப்பாற்பட்டது. (08 ஆம் பக்கம் பார்க்க)

## யசூசி அகாஷி தெரிவிப்பு




ரோக்கியோ —

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகளை தடைசெய்த போதிலும், ஜப்பான் அந்த வழியைப் பின்பற்றும் திட்டம் எதனையும் கொண்டிருக்கவில்லை என ஜப்பானின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாசி தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் அதிகரித்துவரும் வன்செயல்கள் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்துகின்றன. ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகளை தடைசெய்தபோதிலும் ஜப்பானும் அவ்வாறு செய்ய வேண்டிய தேவை இருக்குமென (08 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ புலனாய்வுத் துறையினரே கிளைமோர் தாக்குதலை நடத்தினர்!

## தமிழ்ச்செல்வன் குற்றச்சாட்டு



ஒஸ்லோ —

கொழும்பு - வெலிசறையில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதல் இராணுவப் புலனாய்வுத் துறையினரால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக ஒஸ்லோவிலிருந்து அவர் தெரிவித்துள்ளதாவது;-

விடுதலைப்புலிகளுக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதற்காக இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் (08 ஆம் பக்கம் பார்க்க)

# கைதடி வெளியிலிருந்து மேலுமொரு சடலம் மீட்பு

யாழ்ப்பாணம் —

கோப்பாய் - கைதடி தரவை வெளிப்பகுதியில் புதைக்கப்பட்டிருந்த மேலும் ஒரு சடலம் உருக்குலைந்த நிலையில் நேற்று மீட்கப்பட்டது.

கோப்பாய் - கைதடி தரவை வெளிப் பகுதியில் நேற்றுமுன்தினம் பூசகர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டதையடுத்து - சம்பவத்தைப் பார்வையிடுவதற்கு சாவகச்சேரி மாவட்ட நீதிவான் பிறேம்சங்கர், யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி து. சுவேந்திரராசா மற்றும் சட்டத்தரணி றெமீடியஸ் ஆகியோர் நேற்று தரவைப் பகுதிக்குச் சென்றிருந்தனர்.

அங்கு விசாரணையை மேற்கொண்ட இவர்கள் - மேலும் சடலம் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மணலைத் தோண்டியபோது மிகவும் உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டது.

நேற்று மாலைவரை சடலம் புதைக்கப்பட்டிருந்த இடத்தில் புதைகுழி தோண்டும் பணி நடைபெற்றது. இன்றும் அங்கு மண்ணியல் நிபுணர்கள் மற்றும் (08 ஆம் பக்கம் பார்க்க)

# பஸ்ஸிலிருந்து இறக்கி இளைஞன் மீது சூடு!

கொழும்பு —

மட்டக்களப்பு - வாழைச்சேனை வாகரையில் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டில் தமிழ் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - யோகநாதன் சதீஸ்வரன் (வயது 25) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

வாழைச்சேனையிலிருந்து தனது சகோதரியுடன் பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்த இவரை, அரபு வித்தியாலயம் அருகே நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் (08 ஆம் பக்கம் பார்க்க)

# முள்ளியில் சிப்பாய் காயம்!

யாழ்ப்பாணம் —

வடமராட்சி - முள்ளிப் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுக் காலை முள்ளிப் பகுதியில் நின்றிருந்த படையினர் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தி (08 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் கிரனேட் வீச்சு நான்கு படையினர் காயம்!


மன்னார் —

மன்னார் பொதுவிளையாட்டரங்கில் அமைந்துள்ள படையினரின் காவலரண் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் மூன்று இராணுவத்தினரும், ஒரு பொலிஸாரும் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு 7.10 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த இராணுவத்தினரும் மற்றும் பொலிஸாரும் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (08 ஆம் பக்கம் பார்க்க)

# மயிரிழையில் வெற்றியை தவறவிட்டது இந்தியா!









அன்டிகுவா—

இந்திய - மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையே பரபரப்பாக நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவுற்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாட இணக்கம் தெரிவித்தது.

இதன்படி இந்திய அணி முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 241 ஓட்டங்களைப் பெற்றது.

அந்த அணி சார்பாக ராவிட் 49, ஷேவாக் 36, ஸ்ரீசாந்த் 29 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் பிராவோ 4, கொலிமோர் 3, எட்வேட்ஸ் 2, மொகமட் 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 371 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் கெய்ல் 72, சர்வான் 58, பிராவோ 68 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் கும்ளே மற்றும் பட்டேல் தலா 3, வி.ஆர்.வி.சிங் மற்றும் ஷேவாக் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

130 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தொடர்ந்து தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி 6 விக்கெட் இழப்புக்கு 521 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது.

மிகச்சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய ஜபார் 24 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 212 ஷேவாக் 41, லக்ஷ்மன் 31, ராவிட் 62, யுவராஜ் சிங் 39, டோனி 69 கைஃப் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் மொகமட் 3, கொலிமோர், பிராட்ஷோ மற்றும் கெய்ல் தலா 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 392 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பாக கெய்லும் கங்காவும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர்.

இருவரும் மிகவும் நிதானமாக ஆடி நல்ல அடித்தளமொன்றை இட்டனர். ஸ்கோர் 67 ஐ தொட்டபோது கங்கா 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய சர்வான் ஒரு ஓட்டத்துடனும், லாரா ஓட்டமெதையும் பெறாமலும் ஸ்ரீசாந்த்தின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து கெய்லுடன் சந்தர்போல் இணைந்தார். இவர்கள் இருவரும் தமக்கிடையில் 99 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்து சரிவிலிருந்த மேற்கிந்தியத்தீவுகள் அணியை மீட்டனர்.

இந்த நிலையில் 69 ஓட்டங்களைப் பெற்ற கெய்ல் கும்ளேயின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து சந்தர்போல் 62, பிராவோ 28, ராம்டீன் 8, பிராட்ஷோ 10, ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இறுதிக்கட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தோல்வியைத் தவிர்க்க உதவிய மொகமட் அதிரடியாக ஆடி 10 பவுண்டரிகள் அடங்கலாக 52 ஓட்டங்களைப் பெற்றார்.

இறுதியில் ஆட்டநேர முடிவில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 9 விக்கெட் இழப்புக்கு 298 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பந்துவீச்சில் கும்ளே 4, ஷேவாக் மற்றும் ஸ்ரீசாந்த் தலா 2, முனாப் பட்டேல் 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக இரட்டைச்சதம் அடித்த ஜபார் தெரிவானார்.


## செம்பியன் செல்வன் நினைவுகூரல்
## 2006.06.08



தோற்றம் 01 01 1943

மறைவு 20 05 2005

கோடை மழை அலகுகள்;
புயல் சீறிச் சுழன்றடிக்கும்
மாரிப் பெருந்துளிகள்;
மனல் வாரியிறைக்கும்
வரள் காற்றுச் சிற்றுளிகள்

இவை யாவும் ஒன்றாகி
காலப் பெருவெளியில் செதுக்கிச்
சீராக்கச் சிற்பமானோம்.
அகவுலகப் படிமமென
ஓங்கி நிற்போம்

எனக் கவிபாடி காவியமானீர்.
துணை இழந்த அன்றில் போல் தவிக்கின்றோம்.
துணிவினைத் தந்திடவும், மனதில் அமைதியையும் வேண்டி நிற்கும்,

நண்பர்கள், உறவினரை அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மகன் குடும்பத்தினர்.

[C/2296]

## சிறுவிளம்பரம்

### தவறிவிட்டது

மீசாலைக்கும், அல்லாரைக்கும் இடையில் நிரோஜினி ஆனந்த நடராஜா (825934146V) என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், கையடக்கத் தொலைபேசியும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மீசாலை வங்களா றோட் மம்மி டடி வீட்டில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொலைபேசி இல:- 0773583906

(2297)

## ராஜா யாழ்ப்பாணம்

பரத், பத்மபிரியா ஆரியா மற்றும் பலர் நடித்த



பட்டியல்

(புதிய வெளியீடு)

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

## மனோகரா யாழ்ப்பாணம்

குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டும்

அஜித்குமார், சதா

திருப்பதி



(7 ஆவது வெற்றிவாரம்)

காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

## நிறைஞ்சனாஸ் சங்கானை

சூரியா, அசின், பிரகாஷ்ராஜ் நடித்த

கஜினி

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30


# தீவுப்பகுதி பயணிகள் பஸ்களில் படையினர் ஆயுதங்களுடன் பயணம்

வேலணை—

தீவுப்பகுதிகளில் சேவையில் ஈடுபடும் பயணிகள் பஸ்களில் கடற்படையினர் தற்போது பெருமளவில் ஆயுதங்களுடன் பயணம் செய்கின்றனர்.

இதனால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன், பஸ் பயணத்தை மேற்கொள்ளவும் அச்சமடைகின்றனர்.

படையினருக்கும், படை வாகனங்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கிளைமோர் தாக்குதல்களை அடுத்து - படையினர் தமது வாகனங்களில் பயணிப்பதை தவிர்த்து பஸ்களில் பயணித்துவருகின்றனர்.

காவலரண்களுக்கு மாறும் படையினர், பிற வேலைகள் நிமிர்த்தம் பயணிக்கும் படையினர் இவ்வாறு பொதுமக்கள் போக்குவரத்துச் செய்யும் பஸ்களைப் பயன்படுத்துவது வேதனைக்குரியதுடன், மக்களை அச்சத்துக்குள்ளாக்கியும் உள்ளது. (கே)


## யாழ்.வண்ணை தாமரை வீதி கோட்டையம்பதி அருள்மிகு
## ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தேவஸ்தானம் மஹோற்சவ அறிவித்தல்

இன்று (08.06.2006) வியாழன் காலை 5 மணிக்கு மூலஸ்தான அபிஷேகமும் பூசையும், 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசை, 9 மணிக்கு பெருமான் தேரில் ஆரோகணித்தல், 11 மணிக்கு தேரிலிருந்து ஆலயத்துக்கு எழுந்தருளலும், பிராயச்சித்த அபிஷேகமும், சண்முக அர்ச்சனையும் -

நாளை (09.06.2006) வெள்ளி காலை 6 மணிக்கு மூலஸ்தான அபிஷேகம், 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசை, 10.30 மணிக்கு தீர்த்தம், மாலை 4 மணிக்கு கொடியிறக்கம் -

நாளை மறுநாள் (10.06.2006) சனி பகல் 10 மணிக்கு அபிஷேகமும் - பூசையும், பிற்பகல் 3 மணிக்கு திருக்கல்யாணம், மாலை 2.30 மணிக்கு ஆலய இந்து இளைஞர்களால் நடத்தப்பட்ட சைவ சமய அறிவுப்போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்கல்.

*தாமரை வீதி,*
*வண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

(சி-5383)

இங்ஙனம்,
ஆலய பரிபாலன சபை.

## பிரத்தியேக பாதுகாப்புச் சேவை - 2006
## இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு)

இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு) சாலைகளுக்கான பாதுகாப்புக் கடமைக்காக பிரத்தியேக பாதுகாப்பு சேவையினரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதன் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 1. யாழ்.சாலை | காலை 0600 - 1800 - 05 பேர் |
| | மாலை 1800 - 0600 - 06 பேர் |
| 2. யாழ்.பேரூந்து நிலையம் | காலை 0600 - 1800 - 03 பேர் |
| | மாலை 1800 - 0600 - 02 பேர் |
| 3. மல்லாகம் வேலைத்தளம் | மாலை 1800 - 0600 - 03 பேர் |
| 4. பருத்தித்துறை சாலை | காலை 0600 - 1800 - 03 பேர் |
| | மாலை 1800 - 0600 - 03 பேர் |
| 5. காரைநகர் சாலை | காலை 0600 - 1800 - 03 பேர் |
| | மாலை 1800 - 0600 - 03 பேர் |
| 6. மன்னார் சாலை | காலை 0600 - 1800 - 04 பேர் |
| | மாலை 1800 - 0600 - 04 பேர் |

ஒவ்வொரு சாலைகளிலும் பாதுகாப்புக் கடமை புரிவதற்கு 01 நாளைக்கு 12 மணித்தியாலங்களுக்கு ஒருவருடைய வேதனத்தைக் குறிப்பிடவும்.

**விண்ணப்பிக்க விரும்புபவர்கள் :**

1. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரத்தியேக பாதுகாப்புச் சேவை - 2006" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் "பொது முகாமையாளர், இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு), பலாலி வீதி, கோண்டாவில்" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
2. சேவைகள் திருப்தியற்றதாகக் காணும் பட்சத்தில் ஒருமாதகால முன்னறிவித்தலுடன் சேவை இடைநிறுத்தம் செய்யப்படும்.
3. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நகல் தகவல்களை விண்ணப்பப் படிவத்தோடு இணைத்தல் வேண்டும்.

1. பெயரும், விலாசமும்
2. தொலைபேசி இலக்கம்
3. சேவைப்பதிவின் இலக்கமும், திகதியும்
4. சேவையின் தன்மை
5. பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக் கடிதம்
6. வங்கியின் பெயர்

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி : 2006.06.15**

குறிப்பு : கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவு செய்யும் பெயரிலேயே வழங்கப்படும்.

க.கணேசபிள்ளை
பொதுமுகாமையாளர்,
இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு),
கோண்டாவில்.

[C/5378]

# சகல இனங்களும் ஏற்கும் தீர்வுக்காக அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது!

## என்கிறார் நிமால் சிறிபால டி சில்வா

கொழும்பு —

இனப்பிரச்சினைக்கு சகல இனங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பேச்சுவார்த்தை மூலமான தீர்வை ஏற்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இதற்காக நோர்வேயின் அனுசரணையுடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகார பிரதிச் செயலாளர் இப்ராஹிம் கம்ஹாரியுடனான சந்திப்பின் போதே அவர் இந்த் விடயங்களைத் தெரிவித்தார்.

இலங்கையின் சமாதான முன்னெடுப்புகள் மற்றும் ஜெனிவா பேச்சுவார்த்தைகளின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

இதேவேளை, தேசிய ரீதியில் ஒற்றுமையை ஏற்படுத்துவதன் மூலம் சமாதான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஐக்கிய நாடுகள் பிரதி பொதுச் செயலாளர் உட்பட முக்கிய அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தினார்.



# இராணுவத்தில் இணைந்து கடமை புரிந்த தமிழர் கைது

கொழும்பு —

சிங்களப் பெயரொன்றை பாவித்து வடக்கிலுள்ள பிரதான இராணுவ முகாமொன்றின் கொமாண்டோ படைப்பிரிவில் கடமையாற்றி வந்த தமிழர் ஒருவரைக் கைதுசெய்துள்ளதாக இராணுவ வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

இவர் நள்ளிரவு வேளையில் கைத்தொலைபேசியில் நீண்டநேரம் உரையாடிக்கொண்டிருந்ததை அவதானித்த படையினர் இராணுவ அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்தே அவர் புலிகளுடன் தொடர்புள்ளவரா? எனச் சந்தேகிக்கும் இராணுவத்தினர் - அவர் தொடர்பான சகல ஆவணங்களும் சிங்களத்தில் தயாரிக்கப்பட்டே இராணுவத்தில் இணைந்ததாகத் தெரிவித்தனர்.

இந்த கொமாண்டோ வீரர் வடக்கின் முக்கிய இடத்தின் கொமாண்டோ பிரிவொன்றில் சேவையில் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பகிரங்க மன்னிப்பு கோரிய அனுர பண்டாரநாயக்க!

கொழும்பு —

500 மில்லியன் ரூபா நட்டஈடு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க அமைச்சர் அனுர பண்டாரநாயக்கவுக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் சமாதான முறையில் தீர்த்து வைக்கப்பட்டது.



இந்த வழக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி பீ.ரணசிங்க முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மனுதாரர் சார்பில் ஆஜரான பண்டாரநாயக்க தெரிவித்த கருத்தால் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவுக்கு அபகீர்த்தி ஏற்பட்டிருக்குமானால், அதற்கு மன்னிப்பு கோருவதாக எதிர்த்தரப்பு சட்டத்தரணி தெரிவித்தார்.

இதற்கு அமைவாக அனுர பண்டாரநாயக்க பகிரங்க மன்னிப்புக் கோரியதையடுத்து சமாதானமான முறையில் இந்தப் பிரச்சினை தீர்த்து வைக்கப்படுவதாக நீதிபதி அறிவித்தார். (01)

# மினிபஸ் ஒன்றினுள் ஆடம்பர மதுபானசாலை

கொழும்பு —

மினிபஸ் ஒன்றில் இயங்கிய ஆடம்பர மதுபானசாலை ஒன்றை கைப்பற்றியதாக அனுராதபுரப் பொலிஸார் தெரிவித்தனர்.

அனுராதபுரத்தில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் அருகில் கைப்பற்றப்பட்ட இந்த வாகனத்தில் இருந்து 90 வகையான வெளிநாட்டு மதுபானங்களை பொலிஸார் மீட்டனர்.

இந்த வாகனத்திலிருந்து கைது செய்யப்பட்டவர்கள் மொரட்டுவ மற்றும் நீர்கொழும்பு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் பல வருடங்களாக இந்தப் பிரதேசத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளார்கள் என்று விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

# மேலும் 84 அகதிகள் தமிழகத்துக்கு!

கொழும்பு —

இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு மேலும் 84 பேர் அகதிகளாகச் சென்றனர்.

தனுஷ்கோடி சென்றடைந்த அவர்களிடம் தமிழகப் பொலிஸார் விசாரணை நடத்தினர். அதன் பின்னர் மண்டபம் அகதி முகாமுக்கு அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டனர்.

# பாதுகாப்பு அமைச்சின் பிரதி செயலராக சந்தகிரி



கொழும்பு —

பாதுகாப்பு அமைச்சின் பிரதிச் செயலாளராக கூட்டுப்படைகளின் தளபதி அட்மிரல் தயா சந்தகிரி நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கீழ் அவர் பணிபுரியக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்த மாதம் முதல் இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படக்கூடும்.

தற்போதைய கடற்படைத் தளபதியான றியர் அட்மிரல் வசந்த கரன்னகொடவிடம் தனது பொறுப்புகளை தயா சந்தகிரி ஒப்படைக்கக்கூடும். புதிய கூட்டுப்படைத் தளபதியாக விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா நியமிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# சர்வதேச சமூகத்தின் தலையீடு; மகிந்தவின் ஆலோசகர் அதிருப்தி

கொழும்பு —

இலங்கை இனப்பிரச்சினையில் சர்வதேசத்தின் தலையீட்டை ஜனாதிபதி வலியுறுத்தியமை தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசகர்களில் ஒருவரான நசீர் அகமட் அதிருப்தி தெரிவித்தார்.

முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் ஜனாதிபதி மகிந்தவின் ஆலோசகர்களில் ஒருவருமான நசீர் அகமட்டை நேற்றுமுன்தினம் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது அவர் மேலும் கூறியதாவது -

தற்போதைய சூழலில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவானது அரசாங்கத்துக்கு மிகவும் முக்கியமானது.

தென்னிலங்கையின் ஒருமித்த கருத்துக்கும், அமைதி முயற்சிகளுக்கும் அந்தக்கட்சியின் ஆதரவு அவசியமானது.

ஜனாதிபதி மகிந்தவின் உறுதியான நடவடிக்கைக்கு அனைத்து கட்சிகளினதும் ஆதரவு தேவையானது.

கட்சி அரசியல்களுக்கு அப்பால் 70 வீத மக்களால் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் அரசாங்கத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பை அளிக்க வேண்டும்.


எதிர்காலத் தலைமுறையினருக்கான அமைதியை உருவாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். சர்வதேசத்தின் உதவியை கடந்த காலங்களில் அரசியல் தலைவர்கள் கோரியதன் மூலம் இனப்பிரச்சினை பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. இது நாட்டுக்கு சிக்கலைத்தான் உருவாக்கி உள்ளது எனத் தெரிவித்தார்.

# அரசாங்க ஊடகங்களில் தமிழ்மொழி புறக்கணிப்பு

## ஜே.வி.பி தெரிவிப்பு

கொழும்பு —

அரச ஊடகங்களில் தமிழ்மொழிக்கு புறக்கணிப்பு நிலை ஏற்படுத்தப்பட்டு வருவதாக ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது.



இந்தக் குற்றச்சாட்டை ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் சந்திரசேகரன் முன்வைத்துள்ளார்.

தொலைத்தொடர்புகள் துறை அமைச்சுக்கான ஆலோசனைக்குழுக்கூட்டம் நாடாளுமன்றத்தில் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவின் தலைமையில் நடைபெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

தொலைக்காட்சியில் தமிழுக்காக ஒதுக்கப்பட்டுள்ள அலைவரிசையில் நிகழ்ச்சிகளுக்கான நேரங்களில் கிரிக்கெட் போட்டிகள் ஒலிபரப்பப்படுகிறது. வானொலியிலும், லேக்ஹவுஸ் நிறுவனத்திலும் இவ்வாறான புறக்கணிப்புகள் இடம்பெறுகின்றன என்றார்.

இதையடுத்து குறித்த விடயங்களில் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இடம்பெயர்ந்தோருக்கு உதவுவதற்கு அரசாங்கத்திடம் போதிய நிதி இல்லை

## என்கிறார் அமைச்சர் ரிசாத் பதியுதீன்

கொழும்பு —

அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளால் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவும் மனிதாபிமான நிறுவனங்களுக்கு வழங்க இலங்கை அரசாங்கத்திடம் போதிய நிதியில்லை என அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 5 மாத காலத்தில் இடம்பெயர்வோர் எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்துள்ளது. அந்த மக்களுக்கு உதவுவதற்காக அரசாங்கம் உதவி வழங்கும் நிறுவனங்கள், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் உதவி கோரியுள்ளது.

அண்மையில் இடம்பெயர்ந்த மக்களை உதவித் திட்டங்களில் இணைத்துக்கொள்ள முடியவில்லை. அரசாங்கத்திடம் அதற்கான போதிய நிதி இல்லை.

அதிகரித்துவரும் வன்முறைகளால் கடந்த சில மாதங்கள் மட்டும் இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுகின்ற பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் தமிழ்நாட்டுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

வடக்கு - கிழக்கில் தொடர்ந்து பல பகுதிகளிலும் மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர். எனவே இடம்பெயர்ந்த மக்களது சரியான எண்ணிக்கையை அறிவிக்க இயலாமல் இருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளால் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளதாக அரசாங்கத்தின் புள்ளிவிபரங்களிலிருந்து தெரியவந்துள்ளது எனத் தெரிவித்தார்.

# மனித உரிமை குறித்த பாடங்கள் பாடசாலைகளில் கற்பிக்கப்படும்!

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

கொழும்பு —

பாடசாலைகளில் மனித உரிமை குறித்த பாடங்கள் கற்பிக்கப்படும் என்று பேரழிவு மேலாண்மை மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

பெரதேனியா பல்கலைக்கழகத்தில் பேரழிவு மேலாண்மை முதுநிலைப் படிப்பு தொடக்க விழாவில் கலந்து கொண்ட அவர் தெரிவித்ததாவது -

டிசம்பர் 26 ஆம் திகதி தேசிய பாதுகாப்பு நாளாக செயற்படுத்தப்படும். நாட்டின் பேரழிவு மேலாண்மை தொடர்பான சட்டம் முறைப்படுத்தப்படும்.

மனித உரிமைகளை மீறுவோர் தொடர்பாக உரிய முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால், விசாரணைகள் நடத்தப்பட்டு கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மனித உரிமைகள் தொடர்பான குழுக்களை மனித உரிமைகள் அமைச்சு நிய[illegible]க்கும். பாடசாலைகளில் மனித உரிமைகள் குறித்த பாடங்கள் பயிற்றுவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு கடற்பரப்பில் கரையொதுங்கிய சீனப்படகு

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு கடற்பரப்பில் நேற்று முன்தினம் காலை படகொன்று கரையொதுங்கியது. இது சீன மீனவர்களின் றோலர் படகு என திருகோணமலை கடற்படையினர் தெரிவித்தனர்.

படகில் ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சினை காரணமாகவே இந்தப் படகு இந்திய கடற்பரப்பின் ஊடாக மட்டக்களப்பு கடற்பகுதிக்கு வந்துள்ளது.

இதேவேளை, இந்தப் படகை திருத்தும் பணிகளில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர். 21 பேர் பயணித்த இந்தப் படகை திருத்த முடியாமல் போகுமிடத்து திருகோணமலை கடற்படைத்தளத்துக்கு இதனைக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.



வன்னிப் பெருநிலப்பரப்பில் விடுதலைப்புலிகளின் முன்னரங்க களமுனைகளுக்கு நாள் தோறும் பெருமளவான பொதுமக்கள் சென்று ஆதரவு தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் நேற்றுமுன்தினம் முகமாலை முன்னரங்கப் பகுதிகளுக்கு அக்கராயன் பிரதேச மக்கள் செல்வதையும், போராளிகளுடன் உரையாடுவதையும், உணவுப் பொருட்களை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# வாழ்வதற்கு ஆசைப்படுவதன் வெளிப்பாடே தற்காப்பு பயிற்சி

## தமிழினி தெரிவிப்பு



கிளிநொச்சி—

வாழ்வதற்கு ஆசைப்படுவதன் வெளிப்பாடுதான் தற்காப்புப் பயிற்சிகள் என தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்தார்.

கிளிநொச்சி உதயநகர் கிழக்கில் இடம்பெற்ற தற்காப்பு பயிற்சி நிறைவு நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

நாம் அழிந்து போகவேண்டுமென்றால் எந்த முயற்சியும் இன்றி இருக்கலாம். அரச படைகள் மிகச் சுலபமாக எம்மை அழித்துவிடும்.

இதனைத்தான் அவை கடந்த காலங்களில் செய்திருக்கின்றன. இப்போதும் செய்கின்றன.

புங்குடுதீவில் தர்சினி என்ற இளம்பெண் கடற்படையினரால் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டபோது - வாழ்வதற்கு ஆசைப்பட்ட அந்தப் பெண்ணால் அது முடியாது போய்விட்டது. அவர்களை எதிர்த்து போரிடும் வல்லமை இருக்கவில்லை. ஆனால், தர்சினியின் வயதையே கொண்டிருந்த அங்கயற்கண்ணியால் மிகப் பெரும் சாதனையைச் செய்து எதிரிக்கு அழிவைக் கொடுக்க முடிந்தது.

மகத்தான சாதனைகளைப் படைக்க வல்லவர்கள் எதையும் செய்யாமல் அற்பமாக அழிந்து போகிறோர்கள். அவர்கள் தமது ஆற்றலை சரியான முறையில் பயன்படுத்தாமைதான் இதற்குக் காரணம் என அவர் மேலும் தெரிவித்தார். (கு,09)

# மன்னாரில் குண்டுப்புரளி பொதுமக்களிடையே பதற்றம்

மன்னார்—

மன்னார் பஸ்தரிப்பு நிலையப் பகுதியை திடீரென பொலிஸாரும், இராணுவத்தினரும் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தியதால், அந்தப் பகுதியில் பெரும் பதற்றநிலை ஏற்பட்டது.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் பஸ்தரிப்பு நிலையப் பகுதியை சுற்றிவளைத்த இராணுவத்தினர் - பொதுமக்கள் அனைவரையும் உடனடியாக வெளியேறுமாறு கூறி அந்தப் பகுதியை சல்லடை போட்டுத்தேடினர்.

எனினும் இந்தத் தேடுதல் நடவடிக்கையில் எதுவும் மீட்கப்படவில்லையெனத் தெரியவருகிறது.

மன்னார் நகரப்பகுதியில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த அநாமதேய தொலைபேசித் தகவலையடுத்தே இந்தச் சுற்றிவளைப்புத்தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவருகிறது. (மோ)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு அவசர கலந்துரையாடல்!

வட்டக்கச்சி—

கிளிநொச்சி - முல்லைத்தீவு துணுக்காய், ஆகிய கல்வி வலயப் பாடசாலைகளில் கடமைபுரியும் தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் பின்வரும் இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தில் நடைபெறவுள்ளதால் - சகல தொண்டர் ஆசிரியர்களையும் அன்றைய தினங்களில் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ கல்விக் கழகத்தினர் கேட்டுள்ளனர்.

முல்லைத்தீவு வலய தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி பொது மண்டபத்திலும், துணுக்காய் கல்வி வலய தொண்டர் ஆசிரியர்களுக்கு இன்று பிற்பகல் 2 மணிக்கு துணுக்காய் கல்வி வலய மண்டபத்திலும், கிளிநொச்சி கல்வி வலய தொண்டர் ஆசிரியர்களுக்கு நாளை காலை 10 மணிக்கு கிளிநொச்சி கல்வி வலய முறைசார் கல்விப் பிரிவு மண்டபத்திலும் நடைபெறவுள்ளது. (09)

# தற்காப்புப் பயிற்சி நிறைவு!

வட்டக்கச்சி—

திருமுறிகண்டி - சாந்தபுரம் கிராம மக்களுக்கான தற்காப்புப் பயிற்சி நிறைவு நிகழ்வு - கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு திருமுறிகண்டி கிராமத்தில் நடைபெற்றது.

போராளி ஜெகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - சாந்தபுரம் பிரதேச பொறுப்பாளர் ச.சுடர், போராளி குயிலின்பன், போராளி பல்லவன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கியதுடன், பயிற்சியின் போது நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றியீட்டியோருக்கும் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

நிறைவு நிகழ்வாக கலை நிகழ்வுகளும், மகளிர் கலை பண்பாட்டு கழகத்தினரின் நாடக நிகழ்வும் இடம்பெற்றது. (09)

# உலக சுற்றுச் சூழல் தினத்தில் கருத்தூட்டலும், கண்காட்சியும்

கிளிநொச்சி—

உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் அதன் மைய நிறுவனங்களில் ஒன்றாக விளங்கும் கிராமியக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தால் கடந்த திங்கட்கிழமை உலக சூழல் தினம் கொண்டாடப்பட்டது.

காலை 9.30 மணியளவில் கிராமியப் பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தைச் சேர்ந்த தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி இளையோர் மேம்பாட்டு அலுவலகத்தைச் சென்றடைந்தது.

தொடர்ந்து கிராமியப் பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் க.ஜெயசீலன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஆரம்ப நிகழ்வாக, பொதுச்சுடரை இளையோர் மேம்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் நரேஸ் ஏற்றி வைக்க, தேசியக் கொடியை தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையகப் பணிப்பாளர் ரஞ்சன் ஏற்றினார்.

தொடர்ந்து ஈகச்சுடரை கிளிநொச்சி மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ஏற்றினார். அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கை ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச சிறுவர் நலன் திட்டப் பிரிவு வடக்கு-கிழக்கு இணைப்பாளர் பெனிபுறூன், நேபாள நாட்டுப் பிரதிநிதி குசால் குறுாவ் ஆகியோர் ஏற்றினர்.

தொடர்ந்து வரவேற்புரைகள், கருத்துரைகள், சிறப்புரைகள் என்பன நிகழ்த்தப்பட்டு மரக்கன்று நாட்டும் நிகழ்வும் இடம் பெற்றது. மரக்கன்றுகள் நாட்டும் நிகழ்வை சூழல் அபிவிருத்தி உத்தியோகத்தர் தமிழ்ச் செல்வி ஆரம்பித்து வைத்தார்.

அதனையடுத்து சூழல் விழிப்புணர்வு தொடர்பான கண்காட்சியை சூழல் நல்லாட்சி ஆணையகப் பணிப்பாளர் ரஞ்சன் ஆரம்பித்து வைக்க, மாணவ, மாணவிகளுடைய விளக்கத்துடன் கண்காட்சி நிகழ்வு ஆரம்பமானது.

நீண்டகாலப் போர்ச் சூழ்நிலைகளாலும், ஏனைய பல அனர்த்தங்களினாலும், வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் இயற்கை வளங்களில் பெரும்பாலானவை அழிக்கப்பட்டதையடுத்தே எதிர்காலத்தில் எத்தகைய பாதிப்புக்களை மக்கள் எதிர்நோக்க வேண்டி வரும் என்பதை விளக்கும் வகையிலும், எதிர்காலத்தில் சூழலை எவ்வாறு பேணுவது என்பது தொடர்பாகவும், மாசடைந்து காணப்படும் சூழலை மீளவும் கட்டியெழுப்பி பாதுகாத்துக் கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றிய விழிப்புணர்வுகளை மக்களுக்கு குறிப்பாக இளைய சமுதாயத்தினருக்கு விளக்கும் முகமாகவுமே இந்தக் கண்காட்சி அமையப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கண்காட்சிக்கான நிதிப் பங்களிப்பை ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நலன்திட்ட நிதியம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# சூழல் தினத்தை முன்னிட்டு சிரமதானப் பணிகள்

கிளிநொச்சி—

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு தமிழீழ சுகாதார சேவைகளின் ஒழுங்குபடுத்தலின் கீழ் அக்கராயன், பூநகரிப் பிரதேசங்களில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பிரதேசங்களிலுள்ள பொது இடங்கள், பொதுச் சந்தைகள் என்பன பிரதேச சபையாலும், அந்தப் பகுதி வர்த்தகர்களாலும் துப்புரவு செய்யப்பட்டன.

இதில் பொலித்தீன் கழிவுகள், ஏனைய சந்தைக் கழிவுகள் அகற்றப்பட்டதுடன், வர்த்தகர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்துக்களும் வழங்கப்பட்டன.

அக்கராயன் பிரதேச சுகாதார சேவை இணைப்பாளர், அக்கராயன் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆகியோரால் கழிவு இறுதியகற்றல் தொடர்பாகவும், பொதுச் சந்தையின் பராமரிப்புத் தொடர்பாகவும் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

அத்துடன், பூநகரிப் பிரதேசத்திலும் பிரதேச சுகாதார இணைப்பாளரின் ஒழுங்குபடுத்தலில் பிரதேச சபையால் பொலித்தீன் கழிவுகளும் ஏனைய கழிவுகளும் இறுதியகற்றல் மூலம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சந்தைக் கட்டடங்கள் அமைப்பு!

பச்சிலைப்பள்ளி—

பளை பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இரு சந்தைக் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடன் 16 லட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதில் ஒன்று மாசாரிலும் மற்றையது பளை பொதுச்சந்தை வளாகத்திலும் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வன்னியில் தொடரும் எரிபொருள் தட்டுப்பாடு

கிளிநொச்சி—

வன்னிப் பெருநிலப்பரப்பில் எரிபொருள் பெறுவதில் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த பல மாதங்களாக நிலவி வரும் இத்தகைய நிலைமை காரணமாக குறிப்பாக விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உரிய மின்சாரம் கூட வழங்கப்படாத நிலையிலுள்ள வன்னி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் விவசாயிகள் தமது விவசாயத்தை மண்ணெண்ணெய்யை நம்பியே மேற்கொண்டு வருகின்றனர்.

ஏ-9 பாதை அவ்வப்போது மூடப்படுவதைத் தொடர்ந்து எரிபொருள் பற்றாக்குறை கடந்த நான்கு மாதங்களாகத் தொடர்ந்த வண்ணமே உள்ளது.

தற்போது வன்னி மாவட்டத்தில் இருந்த வன்னி விவசாயிகள் வவுனியா மாவட்டத்துக்குச் சென்று குறிப்பிட்ட லீற்றர் எரிபொருளை மட்டும் பெற்று வருகின்றார்கள்.

எனினும் படையினர் 5 லீற்றருக்கு மேல் எடுத்துச் செல்ல அனுமதிக்காமையால், விவசாயிகள் மேலும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். பெற்றோலியக் கூட்டுதாபனம் மூலம், வன்னி மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் எரிபொருளானது பிரதேச செயலாளர்களால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக வீட்டுத் தேவைகளுக்கு மட்டும் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றது.

குறிப்பிட்டளவு மண்ணெண்ணெய் விவசாயிகளுக்கு பங்கீட்டுத் திட்டத்தில் வழங்கப்படுகின்ற போதிலும், இவை விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்யப் போதியதாக இல்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

# மின்வலு உற்பத்தியை அதிகரித்து மின்சார வெட்டைக் குறைக்கலாம்

## மக்கள் தெரிவிப்பு

சாவகச்சேரி

தேவையான மின் வலுவை உற்பத்தி செய்யும் வழிவகைகளைச் செய்தாலே யாழ்.குடாநாட்டு மின்சாரப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யலாம் எனப் பொது மக்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

யாழ்.குடாநாட்டில் சுழற்சிமுறையில் மின்சாரம் துண்டிக்கப்படுவது குறித்து மின்சாரசபை வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டு வினவிய போது - முன்னிரவு நெருக்கடியான நேரமாதலால் வீட்டில் வலுக் குறைந்த 3 மின் குமிழ்களைப் பாவிப்பதுடன், வலுக்கூடிய மின்சாரப் பொருட்களைப் பாவிக்க வேண்டாமென்று தாம் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்திருந்ததாகவும், பொதுமக்கள் செவிசாய்த்து ஒத்துழைத்தால் மின்சாரத்தை துண்டிக்காமல் வழங்கலாம் என்றும், வலுக்கூடிய மின்சாரம் உற்பத்தி செய்யப்படுமிடத்து துண்டிக் காமல் மின்சாரத்தை வழங்கலாம் என்றும் தெரிவித்தனர்.

அத்தோடு சட்டவிரோத மின் பாவனையும் தமக்குப் பெரும் இடைஞ்சலாக இருப்பதோடு பொதுமக்கள் தரப்பில் வீண் உயிர்ப்பலிகளையும் அது ஏற்படுத்துகிறது எனவும் தெரிவித்தனர்.

இது பற்றி பொதுமக்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்கையில் -

* முன்னிரவு நேரத்தில்தான் மின் விளக்குகளின் தேவை அதிகம்.

மாலை 6 மணி தொடக்கம் 9 மணிவரை மின்சார தேவை தவிர்க்க முடியாததாகி விடும்.

அத்துடன் மீற்றர் சேவிஸ் வயர் தட்டுப்பாட்டால் விண்ணப்பம் வழங்கியும் மின்சாரம் விநியோகிக்கப் படாததால், தேவை கருதி சட்டவிரோத மின் பாவனை தவிர்க்க முடியாது உள்ளதாகவும், மின் விநியோகத்தை விண்ணப்பித்தவர்களுக்கு கால தாமதமின்றி மீற்றர் சேவிஸ் வயர் என்பவற்றை தருவித்து, இயன்ற வரை விரைவாக மின் விநியோகம் செய்வதுடன், மின் பிறப்பாக்கிகளின் எண்ணிக்கையைக் கூட்டி கூடியளவு மின்சாரத்தை உற்பத்தி செய்வதே இதற்கான சிறந்த மாற்றுவழி என்றும் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களின் அன்றாட அத்தியாவசிய தேவையைப் பூர்த்தி செய்து உதவவேண்டும் என்றும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (29)

# ரூபவாகினி பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

மானிப்பாய்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவை பணிப்பாளர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக தகுதியான இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள்- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்திருப்பதுடன், வெகுஜன ஊடகத்தில் ஐந்து வருட தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ச்சிப் பிரிவின் கட்டுப்பாட்டாளராக எட்டு வருடம் கடமையாற்றியிருத்தல் வேண்டும் என்பதுடன் ஐம்பது வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் சான்றிதழ்களின் பிரதிகள் உள்ளடக்கிய தமது சுயவிபரக் கோவையை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பணிப்பாளர் (ஆளணி), இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு-07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். (100)

# நெடுந்தீவில் மீண்டும் நிலப்பூச்சித் தொல்லை

நெடுந்தீவு

நெடுந்தீவுப் பிரதேச மக்களை கடந்த பல வருடங்களாக துன்புறுத்தி வரும் நிலப்பூச்சித் தொல்லை மீண்டும் நெடுந்தீவெங்கும் பரவிவருகின்றமையால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த காலத்தில் அரசாங்க அதிபர் எடுத்த முயற்சியால் இந்தப் பூச்சி தொடர்பாக ஆய்வுகள் மேற்கொண்டு இதனைக் கட்டுப்படுத்துவதற்காக பிரதி மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தால் மருந்து விசிறும் பணி மிகவும் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு பூச்சித்தொல்லை கட்டுப்படுத்தப்பட்டது.

இதேவேளை தொடர்ந்து மருந்து விசுறுவதன் மூலமே இந்தப் பூச்சி தொல்லையை முற்றாக அழிக்க முடியும் என ஆய்வுகள் தெரிவித்த போதும் - இது தொடர்பான நடவடிக்கைகளை உரியவர்கள் மேற்கொள்ளாமையால் மீண்டும் பூச்சித்தொல்லை நெடுந்தீவு மக்களை பெரும் அசௌகரியத்துக்குட்படுத்தியுள்ளது.

எனவே இந்தப் பூச்சிப் பெருக்கத்தையும் தொல்லையையும் கட்டுப்படுத்த உரியவர்கள் விரைந்து நடவடிக்கையெடுக்க வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (113)

# சின்னஞ்சிறு செய்திகள்

## அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளவும்

யாழ்ப்பாணம்

குருவீதி காங்கேசன்துறையைச் சேர்ந்த புஸ்பராணி இராசரத்தினம் என்பவரின் தேசிய அடையாள அட்டை (547824474 V) வீசேட அடையாள அட்டை (0907012 332) ஆகிய இரண்டும் கண்டெடுக்கப் பட்டு நமது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே உரியவர் அடையாளங் காட்டிப் இதனைப் பெற்றுக் கொள்ளவும்.

## உதவிப் பிரதேச செயலாளராக நியமனம்

மட்டுவில்

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலராக அ.சாந்தசீலன் கடந்த முதலாம் ஆம் திகதி முதல் பொறுப்பேற்றுள்ளார்.

கோப்பாய் உதவிப் பிரதேச செயலராகக் கடமையாற்றிய இவர் - தென்மராட்சிப் பிரதேச உதவிப் பிரதேச செயலராகக் கடமையாற்றிய ய.பரந்தாமன் - மாவட்டச் செயலக உதவி அரச அதிபராக(தலைமைப்பீடம்) இடமாற்றப்பட்டதையடுத்தே இந்தப் பதவியைப் பொறுப்பேற்றுள்ளார். (24)

## மஹோற்சவம் இரத்து

மட்டுவில்

மட்டுவில் வடக்கு அருள் மிகு ஸ்ரீ மகா முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இந்த வருடம் நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 02 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருந்த இந்த மஹோற்சவம் - ரத்துச் செய்யப்பட்டதையடுத்து, 10 நாட்களும் அலங்கார உற்சவமாக நடைபெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்தனர். (24)

# அறவழி போராட்ட குழுவினரின் சிறுவர் மேம்பாட்டு திட்டங்கள்

சாவகச்சேரி

கனடா அபிவிருத்தி மன்ற நிதியுதவியுடனும் சர்வதேச பயிற்சி மன்றத்தின் அனுசரணையுடனும், அறவழிப்போராட்டக்குழுவினர் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 10 கிராமங்களில் சிறுவர் உரிமை மேம்பாட்டுத் திட்டத்தை செயற்படுத்தி வருகின்றனர்.

தென்மராட்சியில் தெரிவு செய்யப்பட்ட பத்துக் கிராமங்களில் தொண்டர்கள் மூலம் சிறுவர் உரிமை விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், சிறுவர் மற்றும் தாய்மார் கழகங்கள் அமைத்தல், சிறுவர் நூலகங்கள் அமைத்தல், விளையாட்டுப்போட்டி, கலை கலாசாரப் போட்டி நடத்தல், வீட்டுத்தோட்டம், மரம் நடுகை ஊக்குவிப்பு போன்ற பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதாக அறவழிப் போராட்டக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (29)

# நூல் அறிமுக விழா

கொக்குவில்

குருநகர் இளைஞர் கலைக்கழகத்தின் சார்பில் மண்ணின் மைந்தன் மா.கி.கிறிஸ்ரியனின் ''புயலுக்குப் பின்'' நாவல் நூல் அறிமுக விழா நாளை மறுதினம் மாலை 5 மணிக்கு குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

நெய்தலம் இயக்குநர் கலாநிதி அருட்திரு அ.பி.ஜெயசேகரம் அடிகளார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் - நேஜோ கல்சரல் கவுன்சில் இயக்குநர் வி.ஜே.கொன்ஸன்ரைன் அறிமுகவுரையையும், யாழ். திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோன்சன் ராஜ்குமார் சிறப்புரையையும், இளைஞர் கலைக்கழக செயலாளர் சி.எம்.நெல்சன் நன்றியுரையையும் நிகழ்த்துவர். (206)

# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : ம.கருண்யா
முகவரி : சுன்னாகம்.

அகவை மூன்று



பெயர் : ச.பிரஷாயினி
முகவரி : நீர்வேலி.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்

முகவரி

பிறந்த ஆண்டு

கூப்பனுடன் சிறுவரின் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்

# நியமன கடிதங்களை பெற்றுக்கொள்ளவும்

சாவகச்சேரி

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் உள்ள 51 ஆசிரியர்களுக்கு இலங்கை ஆசிரிய சேவை தரம் 2: 11 பதவி உயர்வுக்கான நியமனக் கடிதங்கள் கல்வி அமைச்சால் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் உரியவர்கள் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (29)

# நயினாதீவு வைத்தியசாலைக்கு மின் இயந்திரம் அன்பளிப்பு

நெடுந்தீவு

நயினாதீவு வைத்தியசாலைக்கு யாழ். மாவட்ட அரசஅதிபரால் மின் இயந்திரம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இதன் மூலம் மின் விநியோகம் தடைப்படும் வேளையில் இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாமென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அரச அதிபரால் சுமார் 3 kv வலுக்கொண்ட இயந்திரம் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டு அதனூடாக தற்போது வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த நேர அட்டவணைப்படி வழங்கப்பட்டு வரும் மின்சார சபை மின்விநியோகம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் அவசர வைத்திய தேவைகளுக்கென இந்த இயந்திரம் மூலம் மின்வழங்கமுடியும் என்பதுடன் இதன் மூலம் பெரும் நன்மைகள் கிடைக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (113)

# குறிகட்டுவான் துறைமுகப்பகுதி புனரமைப்பு வேலைகள் ஆரம்பம்

நயினாதீவு

குறிகட்டுவான் துறைமுகவீதி மற்றும் துறைமுகப் பகுதி என்பன கடந்த சில வாரங்களாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த பல வருடங்களாக கடல் நீரால் அரிக்கப்பட்டு வாகனங்கள் செல்வதில் பெரும் சிரமமாக இருந்த இந்தத் துறைமுகப் பால வீதி தற்போது புனரமைக்கப்பட்டு வருவதுடன் துறைமுகத்தை அண்டிய பகுதி அகலமாக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, துறைமுகப் பகுதியும் திருத்தம் செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. நயினாதீவு, நெடுந்தீவுப் பகுதி மக்கள் நாளாந்தம் இந்தத் துறைமுகமூடாக பயணங்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)



தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் ஆன்மீக இதழின் 100 ஆவது இதழ் வெளியீட்டு விழாவில் - யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நூலின் பிரதியொன்றை பிரமுகர் ஒருவருக்கு வழங்குவதையும், ஞானச்சுடர் மலருக்கு ஆக்கங்களை எழுதுவோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். இவர்கள் நல்லூர் ஆதீன முதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர சுவாமிகளுடன் காணப்படுவதையும் படத்தில் காணலாம். (படங்கள் - கசன்)



## புலிகளின் குரல் வானொலியின் 'அரசியல் அரங்கம்' நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்திய உரை

மனிதன் ஒரு அரசியல் மிருகம் என்று முன்னர் அறிஞர் ஒருவர் கூறியிருந்தார்.

எங்களுடைய தியாகி திலீபன் தமிழீழ மக்கள் எப்பொழுதும் அரசியல் விழிப்புணர்வு கொண்டவர்களாக இருக்க வேண்டும். அந்த விழிப்புணர்வுதான் வெற்றிக்கு அடிப்படை என்று எப்போதும் கூறுவார்.

அரசியல் மாற்றத்தை எதிர்பார்க்கிறோம் என்றும் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கடைசியாகச் சந்தித்த அமெரிக்காவின் றிச்சர்ட் பௌச்சர், ஒருவகையான ஏமாற்றம் , விரக்தியான கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார். தங்களது இராணுவ உதவி என்பது எல்லோரும் கூறுவது போல் போருக்கானதாக அமையாது என்று திரும்பத் திரும்ப அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

'நாங்கள் இராணுவத் தீர்வை இலங்கைத் தீவில் ஒருபோதும் பயன்படுத்த மாட்டோம்' என்ற சொல்லை அவர் திரும்பத் திரும்ப பயன்படுத்தியிருக்கிறார்.

கொலை இயந்திரமாக மாற்றி வைத்துள்ளனர்.

அப்படிச் செய்தவர்கள் இப்போது வெளியிடுகிற அறிக்கைகள் அரசாங்கத்தைப் பாதிக்கும் என்பது ஏற்க முடியாது. இந்த அறிக்கைகளுக்கூடாக இலங்கையிடம் இந்த உலகம் எதனை எதிர்பார்க்கிறது?

இலங்கைக்கு உலகத்தால் போடப்படுகிற அழுத்தங்கள் ஒருபோதும் பயனளிக்காது. அந்த அழுத்தம் செலுத்தப்படுகிற சூழலில் ஒரு வித பொறிமுறையை சிங்களம் உருவாக்கிக் கொண்டுதான் வருகிறது.

ஜே.ஆர் அல்லது சந்திரிகா அல்லது மகிந்த ராஜபக்ஷ என யாராக இருந்தாலும் இந்த மாதிரியான அழுத்தங்கள் வருகிறபோது திடீரென குத்துக்கரணம் அடித்து தலையைச்

காத்திரமான சொற்களுடன் கூடிய அறிக்கைகளை வெளியிட்டாலும் கூட மிகுந்த சிக்கலுக்குள் சர்வதேசம் சிக்கி நிற்கிறது.

இலங்கை அரசாங்கத்துக்கு இதுவரையில் உண்மையிலேயே அழுத்தம் கொடுத்தது தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே. புலிகளால் மட்டுமே இது முடிந்தது. விடுதலைப் புலிகளின் போர் ஆற்றலினால் தான் இலங்கை அரசாங்கம் பேச்சுக்கு வந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகளைத்தான் உலகம் பாராட்ட வேண்டும். ஆனால், புலிகளுக்குத் தடை விதிக்கிறார்கள். அது பற்றி நாங்கள் ஒன்றும் அலட்டிக் கொள்ளவில்லை.

ஐரோப்பிய நாடுகள் தடைசெய்த போது நோர்ட்டிக் நாடுகள் எதிர்த்ததாகத் தெரிகிறது. ஐரோப்பிய நாடுகள் செய்தியை வெளியிட்ட செய்தியாளர் சொன்னார் - தங்களுக்குள்ளேயே குழப்பம் இருக்கிறது. தடையால் எதிர்பார்த்த பயனடைய முடியுமா? என்ற கேள்வி இருக்கிறது என்றார்.

இலங்கை அரசாங்கத்தால் எத்தகைய அழுத்தத்தைச் செலுத்த முடியும் என்பதற்கான விடையை இந்த உலகத்தால் கூற முடியுமா? அப்படிக் கூறினால் நாங்கள் மகிழ்ச்சியடைவோம்.

# புலிகளைத் தடை செய்த சர்வதேசம் இலங்கை அரசையும் தடை செய்யுமா?

தமிழ் மக்கள் [illegible]பத்தோடும், வியப்போடும் பார்க்கு[illegible] வகையில் கடந்த சில நாட்களாக தமிழீழ இனச்சிக்கல் குறித்துப் பல நாடுகளின் கோட்பாடுகள், அறிக்கைகளாக, அறிக்கைகளுக்கு மேல் அறிக்கைகளாக வந்து கொண்டிருக்கின்றன.

தமிழீழ இனச் சிக்கலானது உலக அரங்கில் ஒரு முதன்மைச் சிக்கலாக எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலைகளை நாம் பல கோணங்களில் பார்க்கவேண்டும்.

முதலாவதாக ஐரோப்பிய ஒன்றியத் தடையின் அறிக்கை -

இரண்டாவது இணைத் தலைமை நாடுகளின் மிகவும் காத்திரமான அறிக்கை.

மூன்றாவதாக இங்கு வருகை தந்திருந்த அமெரிக்காவின் உதவிச் செயலாளர் றிச்சர்ட் பௌச்சரின் அறிக்கை.

நான்காவதாக நெதர்லாந்து தூதுவரின் காட்டமான அறிக்கை என்று வந்திருக்கின்றன. இந்த அறிக்கைகளுக்கு இடையே சில சொற்கள் கவனமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத் தடையானது - விடுதலைப் புலிகளுக்குப் பெரும் பின்னடைவு என்றும், இரு தரப்பையுமே கடுமையாகக் கண்டித்திருக்கிறது என்றும் விடுதலைப் புலிகள் மீதான தடை பற்றிய சொற்கள் மிகத் தெளிவற்று இருப்பதாகவும் கூறிக் கொண்டு இருக்கின்றார்கள்.

முன்னர் தமிழ்த் திரைப்படப் பாடல் ஒன்று வந்தது 'நடையா இது நடையா? நாட்டிய மல்லோ நடக்கிறது' என்பது அந்தப் பாடல் அதுபோல் ' தடையா? இது தடையா? ஒரு நாடகமன்றோ நடக்குது' என்பது போல் தடை தொடர்பான குழப்பங்கள், சொற்கள் உள்ளன.

ரோக்கியோவில் நடந்த மிக மிக முக்கியமான இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் சொற்தொடர் ஒன்று கவனமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் முறைமையான சட்ட ரீதியான வேணவாக்கள் இலங்கை அரசால் கவனத்தில் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இது மிகவும் கவனமான சொற்பிரயோகம். வேணவா என்பதுதான் தமிழ் மக்கள் நீண்டகாலம் பயன்படுத்தி வந்த சொல். அது இன்றைக்கு உலக அரங்கிலே எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

அதேபோல் நெதர்லாந்து தூதுவரின் அறிக்கை ஒன்றும் வந்துள்ளது. ஏனைய தூதுவர்களை விட மிக வெளிப்படையாகப் பகிரங்கமாகக் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்.

அமைதி முயற்சிகளை மீண்டும் தொடங்க மறுத்தால், இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சர்வதேச அளவில் ஓரம் கட்டப்படும் நிலை உருவாகும் என்று அவர் கூறுகிறார்.

மேலும் நாங்கள் மனிதாபிமான உதவிகளை நிறுத்தாவிட்டாலும் கூட, இராணுவ் உதவிகளை நிறுத்துவோம் என்று கடுமையான சொற்தொடரைப் பயன்படுத்தியுள்ளார்.

இலங்கை போரில் மூழ்கும் போது சர்வதேசத்திலிருந்து ஓரம் கட்டப்பட்டுவிடும். தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதப் பட்டியலில் சேர்ப்பதைவிட, இது மிகவும் முக்கியமானது என்ற சொல்லை அவர் பயன்படுத்துகிறார்.

அதேபோல் இலங்கையில் ஒரு பாரிய

இவை எல்லாம் சர்வதேசத்தின் 'அழுத்தம் கொடுக்கும்' இராஜதந்திர உத்தி என்று பார்க்கிறோம்.

இலங்கைச் சிக்கலில் இத்தகைய அழுத்தம் கொடுக்கிற பணியில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது என்ற கருத்தை முன்வைக்கிறோம்.

ரோக்கியோவில் நடைபெற்ற இணைத் தலைமை நாடுகள் மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ன செய்யவேண்டும்? அரசாங்கம் என்னவேண்டும்? என்ற பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

- ★ *வன்முறையை, பயங்கரவாதத்தை கைவிட வேண்டும்.*
- ★ *பேச்சுவார்த்தைக்கு உடன் திரும்ப வேண்டும்.*
- ★ *ஐக்கிய இலங்கைக்குள் செல்வதற்கான ஒரு அரசியல் சமரசத்துக்குத் தயாராக வேண்டும்.*

என்று விடுதலைப் புலிகள் செய்ய வேண்டியவனவாகக் கூறப்பட்டுள்ளது.

- ★ *தமிழ் மக்களினது சட்டரீதியான, முறைமையான வேணவாக்களை நிறைவேற்ற வேண்டும்.*
- ★ *இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை ஆயுதக்குழுக்களை ஒடுக்க வேண்டும்.*
- ★ *மனித உரிமைகளை மதிக்க வேண்டும்.*

குறிப்பாக கருணாகுழு, ஈ.பி. டி.பி.குழுவை ஒடுக்க வேண்டும்என்றும், இலங்கை அரசாங்கம் செய்ய வேண்டிய பட்டியலை இணைத் தலைமை நாடுகள் வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளை விட, அரசாங்கத்துக்கு இணைத் தலைமை நாடுகள் கொடுத்திருக்கும் ஒரு அழுத்தம் என்று கூட நாம் சிந்திக்கலாம் . மேலோட்டமாகப் பார்த்தால் இது உண்மையாகத் தோற்றமளிக்கிறது தான்.

ஆனால், இலங்கைத் தீவிலே தீர்வைக் காண்பதற்கான அழுத்தத்தை இதுவரை எந்த சக்தி செலுத்தியது? என்ற கேள்வியை நாங்கள் எழுப்புகிறோம்.

இப்போதும் போல் 1983 ஆம் ஆண்டுகளில் படுகொலைகள் நடந்தபோது, இந்திய அரசு நேரடியாகத் தலையிட்டு கடுமையான அறிக்கைகளை வெளியிட்டது. இந்த அறிக்கைகளை ஜே.ஆர். அரசு புறந்தள்ளிய போது ஒரு வித இரகசிய பயிற்சித் திட்டங்களை இந்தியா உருவாக்கி அந்தத் திட்டத்துக்கு ஊடாக தாக்குதல்கள் நிகழ்த்தப்படுவதன் மூலம் அரசை பணிய வைக்க மேற்கொள்ளப் பட்டவற்றை அறிவோம். இந்திய - இலங்கை ஒப்பந்தம் உருவானதும் வடக்கு - கிழக்கு இணைந்த ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டு அது கைவிடப்பட்டதும் அறிவோம்.

உண்மையான அழுத்தத்தை சிங்களத்தின் மீது உலகம் செலுத்தவில்லை.

பலஸ்தீன அரசாங்கத்தைப் பொறுப்பேற்றுள்ள ஹமாஸ் நிர்வாகத்துக்கான உதவிகளை நிறுத்துவதைப் போல் முற்றாகச் சிங்களத்துக்கு சர்வதேசம் நிறுத்தப் போவதில்லை.

சர்வதேச சமூகமானது இராணுவ உதவிகளைக் கட்டுப்படுத்தப் போவதாகக் கூறுவது 'பம்மாத்து'. ஏனெனில், இலங்கை அரசாங்கத்துக்கு இராணுவ உதவிகளை வேண்டிய அளவு கொடுத்து அதனை மிகப் பெரிய

சுற்றி மூக்கைத் தொடுவர்.

இப்போது மகிந்தவும் அதேபோல் உடனடியாக சர்வகட்சி மாநாட்டைக் கூட்டியுள்ளார். பத்திரிகையாளர் மாநாட்டை நடத்தி, ஒரு வகையிலும் இல்லாத புதிய தீர்வை முன் வைக்கப்போவதாகக் கூறியுள்ளார். எனக்கே

இன்று தமிழர் நிலப்பரப்பில் தமிழ் மக்கள் தற்காப்பு பயிற்சிகளை எடுத்து வருகின்றனர்.

இந்தத் தற்காப்பு நிலைக்கு அப்பால் நாங்கள் தாக்குதல் நிலைக்குச் சென்றால் தான் இந்தச் சிங்களம் எத்தகைய தீர்வுக்கு வரும் என்பது சர்வதேசம் அறிந்த உண்மை. இந்த



உரித்தான அந்தத் தீர்வை உருவாக்கப் பல கட்சியினரைக் கொண்ட குழுவை ஏற்படுத்தி, அரசியல் யாப்பு மாற்றம் செய்யப்படும் என்று அனுகுண்டையும் போட்டுள்ளார்

அரசியல் யாப்பு மாற்றம் என்பது இலங்கையில் ஒரு போதும் நடக்காது என்பது எல்லோரும் நன்கறிந்த விடயம். இலங்கையின் அரசியல் யாப்பை மாற்றுவது என்பது உலகத்தைத் தலைகீழாகப் புரட்டிப் போடுவதற்குச் சமமானது.

இந்த உத்தியின் மூலமாக உலகத்தின் அழுத்தங்களைச் செயற்படுத்தவிடாத ஒரு இடைவெளியை மகிந்த உருவாக்கத் தயாராகி விட்டார்.

இந்தியா அழுத்தம் கொடுத்த போது ஜே.ஆர்.ஜெயவர்த்தன அமெரிக்கச் சார்பு நிலையை எடுத்தார். இப்போது மகிந்த இரு சிக்கல்களை எதிர்கொண்டுள்ளார். ஜே.வி.பியானது மகிந்தவோடு இணைந்து அரசாங்கத்தில் சேர்ந்து தீர்வுக்கு ஒத்துழைக்குமா? மகிந்தவை இடையிலே காலை வாரிவிட்டு அவரை துரோகி என்று பட்டம் சூட்டி அதிகாரத்தைக் கைப்பற்றுமா?

என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும். அமெரிக்கா உதவிகளைச் செய்யாதுவிட்டால் சீனா, பாகிஸ்தானோடு உறவுகளைப் பேணுவதன் மூலம் உதவிகளைப் பெற முடியும் என்ற நிலைப்பாட்டை மகிந்த கொண்டிருப்பதால்தான் அமெரிக்கா போன்ற நாடுகள் அவசரமாக அழுத்தங்களைச் செலுத்துகின்றன.

இப்படியான ஒரு சர்வதேச சிக்கலாக இது நீடிக்கின்ற போது தமிழரது மனங்களைப் பாதித்து தமிழீழச் சிக்கலை நீண்ட காலத்துக்கு இழுத்துச் செல்லக் கூடும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

இன்றைக்கு இந்த சர்வதேசம் மிகவும்

உண்மையை உணராது தமிழீழ விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தும் முயற்சிகளில் சர்தேசம் செயற்பட்டால் இலங்கை அரசாங்கம் மேலும் மேலும் பலமடைந்து சர்வதேசத்தின் அழுத்தங்களிலிருந்து விடுபட்டுச் செல்லும் அப்போது சர்வதேசம் மூக்கறுபட்டு நிற்கும் என்பதை முன்கூட்டியே கூறுகிறோம்.

இங்கே இனி நடக்கப் போகிற துன்பங்களுக்கு சர்வதேசம் ஒருவகையில் பொறுப்பேற்கப் போகிறது என்று கடந்த முறை கூறியிருந்தோம்.

ஆகவே, உலகம் விரைந்து செயற்பட்டு என்ன வகையான அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும் என்று விரைந்து முடிவெடுத்து அந்த அழுத்தத்தைக் கொடுக்கிற போது அது பயனளிக்கிறதா? இல்லையா? என்று பார்த்ததன் பின்னர் புலிகளினது போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறோம்.

இவை தர்க்க ரீதியானவை, யதார்த்த பூர்வமானவை என்பதையே மீண்டும் மீண்டும் கூறுகிறோம்.

ஆகவே, புலிகளைத் தடை செய்த சர்வதேசம் அரசாங்கத்தையும் தடை செய்யப் போகிறதா?அல்லது இலங்கை மீது பொருண்மிய தடை விதிக்கப் போகிறதா? அல்லது வெறுமனே அறிக்கை விட்டுக் காத்திருக்கப் போகிறார்களா? என்ற கேள்விகள் வரலாற்றில் பெறுமதியான கேள்விகள்.

இந்தக் கேள்விகளுக்கான பதில்களை ஏற்கனவே அறிந்த தமிழ் மக்கள் தங்களைத் தற்காத்துக் கொண்டு - தங்கள் வாழ்வையும், தேசத்தையும் காத்திட எதை எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்ய ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான் தமிழீழ மக்களின் இறுதிச் செய்தியென அவர் தெரிவித்தார்.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு

- திருக்குறள்

## நமது நோக்கு

# அர்த்தமற்ற தடை முயற்சி!

கருணாகுழுவையும் பயங்கரவாத இயக்கமாகத் தடைசெய்வது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் ஆலோசித்து வருவதாக மேற்குலக இராஜதந்திரி ஒருவரை மேற்கோள் காட்டி 'றொய்ட்டர்' செய்தி வெளியிட்டிருந்தது.

சில நாட்களுக்கு முன்னர் வெளியான இந்தச் செய்தியானது பெயர் குறிப்பிட விரும்பாத இராஜதந்திரி ஒருவரை மேற்கோள்காட்டியே வெளியிடப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிட்ட பின்னர்- புலம் பெயர்ந்துள்ள தமிழ் மக்களும், தாயகத்திலுள்ள தமிழ் மக்களும், புலிகள் இயக்கமும் ஐரோப்பிய ஒன்றியத்தின் மீது கடும் அதிருப்தி கொண்டிருப்பது வெளிப்புடை.

புலிகளைத் தடை செய்துவிட்டாலும் இலங்கைப் பிரச்சினையிலிருந்து ஓரமாக ஒதுங்கிப் போகின்ற மன நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் இல்லை என்பதே உண்மை. இதனால்தான் புலிகளுக்கான தடை விடயத்தில் சில நீக்குப் போக்குகளை அது கடைப்பிடித்து வருகிறது.

புலிகளுக்குத் தடை விதித்தாலும் சமாதான முயற்சிகள் தொடர்பான பேச்சுத் தொடர்புகள் தொடரும் என்று ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்தமை இதனடிப்படையில் தான்.

அதேவேளை, புலிகள் மீதான தடை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில்- வன்முறைகளுக்குக் காரணம் என கருணாகுழு மீதும், அரசுப் படைகள் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

வன்முறைகளுக்கு அரசுப்படைகளும் காரணமென்று அறிக்கை வெளியிட்ட ஐரோப்பிய ஒன்றியம்- புலிகள் மீது மட்டும் தடை விதித்தது எப்படி நியாயமாகும் என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் உள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு முடிவுகளையும், தம்மீதான தடையால் அதிருப்தி கொண்டிருக்கும் புலிகளை திருப்திப்படுத்தவுமே கருணாகுழுமீது தடை விதிப்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் ஆலோசித்திருக்கக் கூடும்.

உண்மையில் ஐரோப்பிய ஒன்றியம் இப்படியான ஆலோசனையை நடத்துகின்றதா என்பது உறுதிப்படுத்தப்படாத அதேவேளை, கருணாகுழுவை ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாத அமைப்பாக பட்டியலிடுவதன் மூலம் எந்தவகையிலும் புலிகளையோ, தமிழ்மக்களையோ திருப்திப்படுத்த முடியாது.

ஏனெனில், புலிகளுக்கு தாயகத்திலும் புலம்பெயர்ந்துள்ள மக்கள் மத்தியிலும் இருக்கும் பேராதரவில் ஒரு சிறுதுளிகூட கருணாகுழுவுக்குச் சார்பாகக் கிடையாது.

கருணாகுழுவை ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிடுவதன்மூலம் எந்த இலாபமும் ஐரோப்பிய ஒன்றியத்துக்குக் கிடையாது. ஏனென்றால், கருணாகுழ ஐரோப்பிய நாடுகளிலுள்ள தமிழ் மக்களின் உதவியில் தங்கியிருக்கவில்லை.

கருணாகுழுவுக்கு இலங்கை அரசுதான் போதிய உதவிகளைச் செய்துகொண்டிருக்கிறது. வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்புகள்கூட இவர்களுக்கு உதவலாம். ஐரோப்பிய ஒன்றியத் தடையின் மூலம் இலங்கை அரசின் உதவிகளோ, புலனாய்வு அமைப்பின் உதவிகளோ கருணாகுழுவுக்கு கிடைக்காமல் போகும் என்றில்லை.

எனவே, கருணாகுழ மீதான ஐரோப்பிய ஒன்றியத் தடை என்பது- வெறும் பேச்சுப் பொருளாக இருக்குமே தவிர, அது தமிழ்மக்களுக்கு நன்மை பயப்பதாகவோ- அவர்கள் திருப்தி கொள்வதாகவோ இருக்காது.

இலங்கையில் வன்முறைகளைத் தடுக்க அழுத்தம் கொடுக்கும் நிலைக்கும் ஐரோப்பிய ஒன்றியம் கருணா குழுவைத் தடைசெய்யுமாறு இலங்கை அரசிடம்தான் வற்புறுத்த வேண்டும். இல்லையேல் இலங்கை அரசு மீதுதான் தடைசெய்ய வேண்டும்.

எய்பவனை விட்டுவிட்டு அம்பை முறிப்பதன் மூலம் எந்தத் தீர்வும் ஏற்படப் போவதில்லை. கருணா குழுவால் தான் அமைதிநிலை குலைந்து போனது உண்மை.

ஆனால், அதற்காக இப்போது கருணா குழுவைத் தடைசெய்வதால் மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடாது. ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் மீது தடைவிதித்த விவகாரத்திலும்சரி, இப்போது கருணாகுழுவைத் தடைசெய்யும் விவகாரத்திலும்சரி நடந்துகொள்ளும் முறையானது பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக சிக்கலாக்குவதாகவே உள்ளது.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# இறந்த காலத்திலேயே அரசு செயற்படுகிறது!

## என்கிறார் ரவி கருணாநாயக்க



கொழும்பு—

நாட்டைப் பாதுகாப்பதற்கு அரசாங்கத்தின் தலைமை சரியாகச் செயற்பட வேண்டும். பொருளாதார யுத்தத்தில் நாம் தோல்வியடைந்தால் சகல யுத்தத்திலும் தோல்வியடைந்து விடுவோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நாடாளுமன்றில் தெரிவித்தார்.

திறைசேரி உண்டியல்கள், கட்டளைச் சட்டம், திறைசேரி நம்பிக்கை பொறுப்புகள் திருத்தச் சட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

அரசாங்கம் இறந்த காலத்திலேயே இருந்து செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. பிரசவிக்கப்படாமல் இருக்கிற எதிர்காலத்தைப் பற்றி சிந்திப்பதேயில்லை. பாதுகாப்பு இறைவரி, கைத்தொழில் சட்டங்களை விதிக்கிறார்கள். ஆனால், பொருளாதாரம் வளர்ச்சியடையவில்லை எனத் தெரிவித்தார்.

# பவ்ரல் அமைப்பின் தலைவர் புலிகளை சந்திக்கவுள்ளார்!

கொழும்பு—

பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொட்றிக்கோ தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு குறித்த மாநாட்டில் பங்கேற்பதற்காக ஒஸ்லோ சென்றுள்ள விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் கிளிநொச்சிக்குத் திரும்பியதும் இந்தச் சந்திப்பை மேற்கொள்ள அவர் திட்டமிட்டுள்ளார்.

இதன்போது சமாதான முயற்சிகள் மற்றும் போர்நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக தாம் விவாதிக்கவுள்ளதாக றொட்றிக்கோ தெரிவித்தார்.

இதனிடையே மதப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய அமைதி நிறுவனம் ஒன்றின் பிரதிநிதிகளும் கிளிநொச்சி செல்லவுள்ளது.

இதுதொடர்பான ஆலோசனைக் கூட்டம் வவுனியாவிலுள்ள போதிதக் சினராம விகாரையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதில் சர்வமதத் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

# ஒஸ்லோ மாநாடு ஒரு நாடக அரங்கு

கொழும்பு—

இலங்கையில் கண்காணிப்புப் பணியை முன்னெடுக்க முடியாது என்பதை உலகுக்கு பறைசாற்றி, அதனூடாக ஐ.நா அமைதிப்படையை வரவழைக்கும் திட்டத்தின் நாடக அரங்கேற்றமே ஒஸ்லோ மாநாடு என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளரும் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

# அல்லைப்பிட்டி மக்களுடன் அமைச்சர் டக்ளஸ் சந்திப்பு!

யாழ்ப்பாணம்—

அல்லைப்பிட்டியில் இடம்பெற்ற படுகொலைகளை அடுத்து அச்சம் கரணமாக இடம்பெயர்ந்து நாவாந்துறை புனித நீக்கிலஸ் தேவாலயம் மற்றும் யாழ்ப்பாணம் அடைக்கலமாதா தேவாலயம் ஆகியவற்றில் தங்கியுள்ள மக்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று சந்தித்துக் கலந்துரையாடியதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அல்லைப்பிட்டியில் தமது பாதுகாப்புக்கான உத்தரவாதம் உறுதிப்படுத்தப்பட்டால் தாங்கள் மீளவும் குடியேறத் தயாராக இருப்பதாக மக்கள் தெரிவித்தனர்.

அந்த மக்கள் மீளக் குடியேறுவதற்கான பாதுகாப்புக்கான உத்தரவாதத்தை அமைச்சர் வழங்கினார். அத்துடன், மருத்துவ, மின்சார, போக்குவரத்து, கல்வி போன்ற அடிப்படை வசதிகள் அனைத்தும் வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். அடைக்கலமாதா தேவாலய பங்குத் தந்தை பயஸ் அடிகளார், நாவாந்துறை நீக்கிலஸ் தேவாலய பங்குத் தந்தை மரிய இளம்பருதி அடிகளார் மற்றும் கிராம சேவையாளர்கள், அரச அதிகாரிகள் கலந்துகொண்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின்சார சபை ஊழியர்கள் கறுப்பு கொடி போராட்டம்

கொழும்பு—

மின்சார சபை ஊழியர்கள் நாடளாவிய ரீதியில் கறுப்புக் கொடிப் போராட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளனர்.

மின்சார சபையை மறு சீரமைக்கும் சட்டமூலம் நாடாளுமன்ற ஆலோசனை தெரிவுக்குழுவுக்கு இந்த மாதம் 8ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அன்றையதினம் நாடு முழுவதிலும் உள்ள மின்னுற்பத்தி நிலையங்கள், பொறியியலாளர் அலுவலகங்கள் மற்றும் மின்சாரப் பொது முகாமையாளர் அலுவலகம் போன்றவற்றில் கறுப்புக் கொடிகள் பறக்கவிட்டு போராட்டம் நடத்தப்படும் என மின்சாரசபை ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை - உத்தேச சட்டமூலமானது இலங்கை மின்சார சபையை தனியார்மயப்படுத்த வழிவகுக்கும் என சங்கத்தினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

# லஞ்சஊழல் முறைப்பாடுகள் உடனுக்குடன் விசாரணைக்கு

கொழும்பு—

லஞ்சம் ஊழல் குறித்து முறைப்பாடு செய்த ஒரு மணி நேரத்துக்குள் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்று லஞ்சம், ஊழல் ஆணைக்குழுவின் தலைவரும், முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசருமான அமீர் இஸ்மாயில் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

நாட்டில் லஞ்சம், ஊழல் அதிகரித்துள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு கடும் முயற்சி எடுத்துவருகின்றோம் -

லஞ்சம், ஊழலில் எந்தவொரு நபர் ஈடுபட்டாலும் பரவாயில்லை. நாங்கள் விசாரணைகளை ஆரம்பிப்போம்.

பொய்யான பெயர்களிலாவது லஞ்ச ஊழல் தொடர்பாக எமக்குத் தகவல்களை வழங்கினால், அது குறித்து உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# விடுதலைப் புலிகள் ஏடு இன்று வெளிவருகிறது!

கிளிநொச்சி—

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடான விடுதலைப் புலிகள் பத்திரிகையின் சித்திரை - வைகாசி 2006 மாதத்துக்குரிய 130 ஆவது குரல்-'தடைகள் உணர்த்த முயலும் அரசியல் செய்திகள் என்ன!' என்ற முகப்புச் செய்தியுடன் இன்று வெளிவருகின்றது.

'ஐரோப்பிய யூனியனின் தடை அநியாயமான நடவடிக்கை' என்ற ஆசிரிய தலையங்கத்துடன் வரும் இவ்வேடு - க.வே.பாலகுமாரன் எழுதிய 'வீரியரின் பூமியாக இது விளங்கட்டும்' என்ற அரசியல் கட்டுரையும், 'கொடூரமான இன அழிப்பு முயற்சியில் பிரேமதாஸவை விஞ்சிவிட்ட மகிந்த ராஜபக்ஷ', 'அரசுக்கும் அரசுக்கும் இடையேயான உறவென்பது ஒடுக்குமுறைக்குத் துணைபோகும் தத்துவம்', 'ரத்தம் தோய்ந்த நாளொன்றின் நினைவுகள்', 'இந்து சமுத்திரத்தின் திறவுகோல் யாருக்கு?', 'தமிழர் தேசமும் சிங்கள தேசமும்' போன்ற அரசியல் கட்டுரைகளுடன் கலாநிதி க.சோமாஸ்கந்தன் எழுதிய 'அமைதியும் அரச பயங்கரவாதமும்' என்ற கட்டுரையையும் - மற்றும் 'ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை என்ன செய்யும்?' போன்ற கட்டுரைகளுடன் 'உலைக்களம்', 'விழுதுகள்', போராளிகளின் படைப்புக்களையும், வழமையான அம்சங்களையும் தாங்கி இவ்வேடு வெளிவருகிறது.

## மின்சாரம் தாக்கியதில் ஈழத்தமிழர் உயிரிழப்பு!

இராமநாதபுரம்—

இலங்கையிலிருந்து கடந்த ஏழு வருடங்களுக்கு முன்பு அகதியாக தமிழகத்துக்குச் சென்ற கண்ணதாசன் (வயது 42) என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

இவர் இராமநாதபுரத்தை அடுத்த மண்டபம் முகாமில் தங்கியிருந்தார்.

இராமநாதபுரம் ராஜவீதியிலுள்ள ஒரு வீட்டில் ஏற்பட்ட மின்தடையைச் சீர்செய்தபோது எதிர்பாராதவிதமாக இவர் மீது மின்சாரம் தாக்கியது.

இதில் தூக்கி வீசப்பட்ட அவர் உடல் கருகிய நிலையில் இராமநாதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மதுரை அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டும் சிகிச்சை பலன்இன்றி பரிதாபகரமாக உயிரிழந்தார்.

## வெலிசறையில் கிளைமோர் 6 பேர் கைது, 60 பேரிடம் விசாரணை!

கொழும்பு—

வெலிசறையில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதல் தொடர்பாக 6 பேர் கைதுசெய்யப்பட்டதுடன், 60 பேரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

களனியா பிரதேச பிரதி பொலிஸ் மா அதிபர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

வெலிசறைப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 4 மணியளவில் கடற்படை முகாமருகே இந்தக் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பத்து வயது சிறுமிமீது கொடூரம்; 3 படையினர் பாலியல் வல்லுறவு!

கொழும்பு—

மட்டக்களப்பில் பத்து வயது சிறுமியை மூன்று இராணுவத்தினர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியுள்ளனர்.

பாடசாலையிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த சிறுமியை இந்த மூவரடங்கிய குழு கடத்திச் சென்று சிறுமியின் பெற்றோரிடம் 50ஆயிரம் ரூபா கப்பமாக கேட்ட து.

இதன்பின் குறித்த சிறுமி வீட்டுக்குத் திரும்பிய வேளை அவரது உடல் உறுப்புக்களில் காயங்கள் இருப்பதைக் கண்ட பெற்றோர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். பின்னர் பாதிக்கப்பட்ட சிறுமி மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்.

இதேவேளை, குறித்த சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய மூன்று இராணுவத்தினரும் மட்டக்களப்பு நகரில் அறையொன்றில் தங்கியிருந்த வேளை அவர்களை பொலிஸார் கைது செய்ததாகவும், இந்த மூவரையும் குறித்த சிறுமி அடையாளம் காட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மூன்று இளைஞர்கள் வெள்ளவத்தையில் கைது!

கொழும்பு—

வெள்ளவத்தையில் கைக்குண்டுகள் மற்றும் பிஸ்ரல்கள் வைத்திருந்தார்கள் எனத் தெரிவித்து மூன்று இளைஞர்களை பொலிஸார் கைது செய்தனர்.

பொலிஸாரின் சோதனைச் சாவடியில் குறித்த மூன்று இளைஞர்களையும் சோதனையிட முயன்றபோது - தம்மைச் சோதனையிடாமல் சித்திரவதை செய்ததாக பொலிஸ் மா அதிபரிடம் முறையிடுவோம் என அவர்கள் கூறியதாகவும் -

இதையடுத்து குறித்த இளைஞர்களை சோதனையிட்டபோது போலி அடையாள அட்டைகள் மற்றும் கைக்குண்டுகளை வைத்திருந்ததால் இவர்களை கைதுசெய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

## வெடிகுண்டு அச்சம் குறித்து கொழும்பில் கருத்தரங்கு!

கொழும்பு—

வெடிகுண்டு பீதிகள் மேலாண்மை தொடர்பான கருத்தரங்கு கொழும்பில் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு தொழில்துறை பாதுகாப்பு நிறுவனம் சார்பில் கொழும்பு - 03 இல் எதிர் வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பாதுகாப்பு குறித்து உயர் அதிகாரிகளுக்கு இந்தக் கருத்தரங்கு நடத்தப்படுவதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.

பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் முன்னாள் இயக்குநரும் தொழில்துறை பாதுகாப்பு நிறுவனத்தின் அதிகாரியுமான எஸ்.பி.டபிள்யூ.டி.சில்வா, தேசிய புலனாய்வுத் துறையின் முன்னாள் பிரதி இயக்குனர் ஸ்மித் கலின் மற்றும் எரிக் பெரேரா ஆகியோர் வெடிகுண்டுகள் மற்றும் வெடிகுண்டு பீதிகள் தொடர்பாக கருத்துக்களை வழங்குவர்.

### கருணா...

கருணா குழுவினர் மீது ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்தாலும் அவர்களது வன்முறைகளை போர் நிறுத்த ஒப்பந்த மீறல்களாக நாம் கவனத்தில் கொள்ள முடியாது. பேச்சு மேசையில் அவர்கள் ஒரு தரப்பினர் அல்ல. நாம் இலங்கை அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளிடையேயான போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் கண்காணிக்கும் பணியையே மேற்கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

### கைதடி...

சட்டவைத்திய நிபுணர்கள் உதவியுடன் புதைகுழி தோண்டும் பணியில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தப் பகுதியில் மேலும் சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

கடந்த டிசெம்பரிலிருந்து பலர் காணாமற்போயிருந்ததாக மனித உரிமை ஆணைக்குழுவில் உறவினர்கள் முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### மன்னாரில்...

இதேவேளை - மன்னார் மதவாச்சி வீதியில் கற்கடந்தகுளம் சந்தியிலுள்ள பொலிஸாரின் காவலரண் மீது இனந்தெரியாத நபர்கள் நேற்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன்போது சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

### பஸ்ஸிலிருந்து...

பஸ்ஸிலிருந்து வலுக்கட்டாயமாக இறக்கிய ஆயுதபாணிகள் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞர் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

### மூள்ளியில்...

விட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் மீது படையினர் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### விடுதலைப்...

நான் கருதவில்லை. ஆனால், இலங்கையின் தற்போதைய நிலைமைகளை நாம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம்.

இன்று ஒஸ்லோவில் நடைபெறவுள்ள கண்காணிப்புக் குழு குறித்த மாநாட்டில் இலங்கை அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் பங்குபற்றுவதை வரவேற்கும் அதேவேளை -

இந்த மாநாட்டின் மூலம் பாரிய மாற்றம் எதுவும் ஏற்படும் என நான் எதிர்பார்க்கவில்லை. இலங்கையில் வன்முறைகள் அதிகரித்த போதிலும், அந்த நாட்டுக்கான பொருளாதார மற்றும் மனிதாபிமான உதவிகளை ஜப்பான் அரசாங்கம் உடனடியாக நிறுத்தாது எனவும் அவர் தெரிவித்தார்.

## இராணுவ புலனாய்வு...

நடத்தப்பட்ட ஒரு திட்டமிட்ட நடவடிக்கையே கொழும்பு கிளைமோர் தாக்குதல்.

இது தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள மக்களைத் தூண்டிவிடுகின்ற ஒரு முயற்சியாகும்.

இந்தத் தாக்குதல் நடத்தப்பட்ட சூழ்நிலையானது - தாக்குதலின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறது. தோல்வியடைந்துவிட்ட அரசாங்கமாக வர்ணிக்கப்படுகிற இலங்கை அரசாங்கமானது தடைகளுக்கு அப்பால் விடுதலைப்புலிகளை இழிவு செய்வதற்காக இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்கிறது.

இதே போல்தான் வெலிக்கந்த - ஓமடியாமடுவிலும் தாக்குதலை நடத்தினார்கள். ஐரோப்பிய ஒன்றியத் தடைஅறிவிப்பைத் தொடர்ந்து ஓமடியாமடுத் தாக்குதலை நடத்தினார்கள்.

இராணுவ புலனாய்வுப் பிரிவினரும், துணை இராணுவக்குழுவினரும் குவிக்கப்பட்டு அப்பாவி சிங்களப் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

இதேவேளை இராணுவத் தலைமைப்பீடத்தின் வழிகாட்டுதலின் கீழேயே இந்தத் தாக்குதலை நடத்தினார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

## படையினர் கிளைமோர்...

கிரான் நோக்கி பொருட்களை வாங்குவதற்காகச் சென்று கொண்டிருந்த பொதுமக்களின் உழவு இயந்திரந்திரமே ஆழ ஊடுருவும் படையினரின் கண்ணிவெடியில் சிக்கியது.

இந்தச் சம்பவத்தில் ஒன்றரை வயதுடைய குழந்தையொன்றும், இரண்டு சிறுவர்களும், ஐந்து பெண்களும், ஆண் ஒருவருமாக மொத்தம் ஒன்பது பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டதுடன், காயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த ஒன்பது பேர் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் சிவநேசன் மதிமலர் (வயது 24), இவரது குழந்தையான சிவநேசன் சிந்துஜன் (ஒன்றரை வயது), சரவண முத்து சந்திரகுமார் (வயது 10), அவரது சகோதரரான சரவணமுத்து தினேஷ்குமார் (வயது 11), சரவணமுத்து மதியழகன் (வயது 22), அவரது மனைவியான மதியழகன் கவிதா (வயது 20), காசிப்பிள்ளை கோமதி (வயது 40), தளையசிங்கம் தங்கலட்சுமி (வயது 48), பத்தினியன் சின்னத்தம்பி (வயது 56) ஆகியோர் சம்பவ இடத்திலும், ஐயாத்துரை சிறிமா (வயது 33) என்பவர் படுகாயமடைந்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியிலும் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் கவிதா (2 மாதம்), சிறீதரன் அனோஜன் (6 மாதம்), பிரதீபன் (வயது 12), சரவணமுத்து சந்திரன் (வயது 14), சங்கணம் ராஜலட்சுமி (வயது 40), மயில்வாகனம் ஜெயரட்ணம் (வயது 46), பத்தினியன் சின்னத்தங்கச்சி (வயது 56), வீரக்குட்டி சின்னத்தம்பி (வயது 50), தங்கவடிவேல் (வயது 46) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

## கைதிகளை விடுவிக்ககோரி உறவினர்கள் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு—

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் கைதிகளை விடுதலை செய்யக் கோரி அவர்களின் உறவினர்கள் நேற்றுக் காலை சிறைச்சாலைக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்றனர் எனக் கூறி 250 இற்கும் மேற்பட்டோர் குடிவரவு - குடியகல்வு சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களில் பெண் கைதியொருவர் சிறையில் மரணமடைந்தார். இதையடுத்து சிறையிலுள்ளவர்களுக்கு பிணை வழங்க அல்லது வழக்குத் தொடர அனுமதிக்குமாறு அல்லது விடுதலை செய்யுமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கோஷங்களை எழுப்பினர்.

## வவுனியாவில் இளைஞன் கைது!

கொழும்பு—

வவுனியா பொலிஸ் நிலையத்தைத் தாக்கப்போவதாக எச்சரித்தார் எனத் தெரிவித்து 21 வயது இளைஞரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த குறித்த இளைஞன் - பொலிஸ் நிலையத்துக்கு வெளியே நின்றிருந்த பொலிஸாரிடம் 10 நிமிடத்துக்குள் அங்கிருந்து வெளியேறிவிடுங்கள் - பொலிஸ் நிலையம் தாக்கப்படும் என எச்சரித்தார்.

அந்த இளைஞரிடம் விசாரணை மேற்கொண்டபோது அவர் ஐந்து கைக்குண்டுகளை வைத்திருந்தது தெரியவந்தது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## அகதிகளை ஏற்றிச்சென்று பிடிபட்ட படகோட்டிகளுக்கு விளக்கமறியல்!

மன்னார்—

மன்னாரிலிருந்து தமிழகத்துக்கு அகதிகளை ஏற்றிச் சென்ற இரண்டு படகோட்டிகளை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மேலதிக நீதிவான் டி.ஜே. பிரபாகரன் நேற்று உத்தரவிட்டார்.

மன்னாரிலிருந்து தமிழகத்துக்கு அகதிகளாகச்செல்வதற்காக இரண்டு படகுகளில் காத்திருந்த 37 தமிழர்களை கடற்படையினர் கடந்த திங்கட்கிழமை இரவு கைதுசெய்தனர்.

திருமலையிலிருந்து இடம்பெயர்ந்த இவர்களில் பெண்களும், குழந்தைகளும் அடங்குவர்.

கைதுசெய்யப்பட்ட அகதிகளை மன்னார் பிரதேச செயலாளர் ஸ்டான்லி டி மெல்லிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர். இதையடுத்து அவர்கள் புனித மரியாள் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டனர்.

படகோட்டிகளான கந்தசாமி இன்பராஜ் மற்றும் அந்தோனி சூசைடயஸ் ஆகியோர் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## வர்த்தக நிலையம் மீது கைக்குண்டு வீச்சு!

கொழும்பு—

வவுனியா வர்த்தகர் சங்கத் தலைவரின் வர்த்தக நிலையம் மீது இன்ந்தெரியாத நபர்களால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் எவருக்கும் சேதம் ஏற்படவில்லை.

வவுனியா மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அரச தரப்புப் பிரதிநிதியான பி.எஸ். அப்துல்லா என்பவரது வர்த்தக நிலையத்தின் மீதே இந்தக் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

## மூதூரில் துப்பாக்கிச்சூடு முஸ்லிம் இளைஞர் காயம்!

திருகோணமலை—

திருகோணமலை - மூதூரில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மூதூர் - சின்னம்பிள்ளை சேனையைச் சேர்ந்த ஏ.எம். யுனைதீன் என்பவரே துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தவராவார்.

இதேவேளை - மூதூர் - பாலை நகரைச் சேர்ந்த ரசீத் முகமட் சஜாத் (வயது28) என்பவர் காணாமற்போயுள்ளார் இவர் அரச சார்பற்ற நிறுவனமென்றில் பணியாற்றுபவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.06.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.